சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 26.04.2018

சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் சித்திரை மாதம் 13–ம் நாள் (ஏப்ரல் திங்கள் 26–ம் நாள்:–26.04.2018) வியாழன் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

இந்நகராட்சயில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அரசாணை எண்.123 நிதி (படிகள்) துறை, நாள்.11.04.2018ன்படி அகவிலைப்படி 5 சதவிதத்திலிருந்து 7 சதவீதமாக 01.01.2018 முதல் உயர்த்தப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:— மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.1282/2018/சி1)**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சியில் பேருந்து நிலையம் அருகில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் சமையலுக்கு பயன்படுத்தப்படும் பாய்லர்கள் பழுது அடைந்துள்ளதால், சமையல் செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது. மேலும் தண்ணீர் தொட்டி (Sintex Tank) உடைந்துள்ளது, அம்மா உணவககததில் சீலிங்க் உடைந்துள்ள மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் மேற்கண்ட வேலைகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.60000/— க்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தில் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**
**1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.1292/2018/இ1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சிக்கு சொந்தமான எரிவாயு தகனமேடையை 2018—2019ம் ஆண்டிற்கான புதுப்பித்தல் கட்டணம் ரூ.9000/—க்கு தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரிய அலுவலகம் தேனி வழியாக கேட்புக் கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து மேற்கண்ட தொகைக்கு வங்கி வரைவோலையாக மேற்கண்ட அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அத்துடன் உரிய ஆவணங்களுடன் 21.03.2018ம் தேதியன்று Online & Offline ஆகிய இருமுறையிலும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. தற்போது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தேனி அலுவலக கடிதத்தில் அரசாணை எண்.M.S.No.40 மற்றும் 41, நாள்.09.04.2018ன்படி புதுப்பித்தல் கட்டணம் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் தற்போது எரிவாயு தகனமேடைக்கான புதுப்பித்தல் கட்டணம் ரூ.12200/— என நிர்ணயம் செய்து நகராட்சியின்

சார்பாக விண்ணப்பத்தை விண்ணப்பம் திருப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட கூடுதல் தொகை அதாவது (ரூ.12200 –9000) ரூ.3200/–ஐ செலுத்த மீள விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தியதற்கிணங்க மேற்கண்ட கூடுதல் தொகையை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தேனி அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட கூடுதல் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**
**3. அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவினத் தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2551/2012/இ1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை 2018–2019ம் ஆண்டிற்கான புதுப்பித்தல் கட்டணம் ரூ.30000/–க்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அலுவலகம், தேனி வழியாக கேட்புக் கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து மேற்கண்ட தொகைக்கு வங்கி வரைவோலையாக மேற்கண்ட அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அத்துடன் உரிய ஆவணங்களுடன் 21.03.2018ம் தேதியன்று Online and Offline ஆகிய இரு முறையிலும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. தற்போது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தேனி அலுவலக கடிதத்தில் அரசாணை எண்.M.S.No.40 மற்றும் 41, நாள்.09.04.2018ன்படி புதுப்பித்தல் கட்டணம் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், தற்போது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய புதுப்பித்தல் கட்டணம் ரூ.43600/– என நிர்ணயத் செய்து நகராட்சியின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் திருப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட கூடுதல் கட்டணம் அதாவது (ரூ.43600–30000) ரூ.13600/–ஐ செலுத்தி மீள விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தியதற்கிணங்க மேற்கண்ட கூடுதல் தொகையை தமிழக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தேனி அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறதுது

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட கூடுதல் செலவினத் தொகை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**
**3. அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவினத் தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4229/2002/இ1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட சீப்பாலக்கோட்டை ரோட்டில் உள்ள கட்டண கழிப்பறையில் கோப்பைகள் மற்றும் கதவுகள் உடைந்து பயன்படுத்த முடியாத சூழல் உள்ளது. மேலும் அங்குள்ள மோட்டார் பழையதாக உள்ளதால் போதிய தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே பழைய மோட்டாரை மாற்றி புதிய மோட்டார் பொருத்தவும், மேலும் மேற்கண்ட கட்டண கழிப்பிடத்தில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.90000—க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:— 1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.1119/2018/இ1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கி வரும் TN60S9443 என்ற காம்பாக்டர் வாகனத்திற்கு 2017—2018ம் ஆண்டு தகுதிச் சான்று புதுப்பித்தல் தொடர்பாக மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.100000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:— 1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1471/2018/எச்1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

சின்னமனூர் எல்லைக்குட்பட்ட சாலையோரங்களில் ஆக்கிரமிப்பு செய்து விற்பனை செய்யும் கடைகள் தலைச்சுமை மற்றும் வண்டிகளில் விற்பனை செய்வரிடம் தினசரி வசூல் செய்யும் உரிமத்திற்கு 2015—2016 முதல் 2017—2018 வரை மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் வழங்கப்பட்டதில் 2015—2016 முதலாம் ஆண்டுக்கு ரூ.335000/— செலுத்தப்பட்டதில் 01.04.2015 முதல் 30.04.2015 வரை ஒரு மாத காலத்திற்கு நகராட்சி பணியாளர்கள் வசூல் பணி செய்து நகராட்சி கருவூலத்தில் பணம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே ஏல உரிமைதாரர் வி.சுரேஷ்க்கு ஒரு மாத காலத்திற்கு உரிய தொகை ரூ.27916/—ஐ திரும்ப வழங்கலாம், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:— 1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.194/2015/அ2)**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN60S2751க்கு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.15000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்வதை அனுமதிக்கலாம். (ந.க.எண்.6260/2014/இ2)** |

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**